சுருக்கம்

கலையும் பண்பாடும் – 2019–2020ஆம் ஆண்டு – உலக நாடக தினம் (மார்ச் 27) – நாடகங்கள் மேடையேற்றம் செய்தல் - நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (நிலை) எண். 113

நாள்: 22–08–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், ஆவணி 5

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண் 167, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 10.09.2018
2. கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கடித ந.க. எண் 3849/இ1/2018, நாள் 09.05.2019

*****

ஆணை:–

உலக நாடக தினம் (World Theatre Day) ஆண்டுதோறும் மார்ச் 27 அன்று பன்னாட்டு அரங்க நிறுவனத்தால் 1961ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு, இந்நிறுவனத்தின் மையங்களிலும், பன்னாட்டு நாடக சமூகங்களினாலும் கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்வையொட்டி பல்வேறு தேசிய பன்னாட்டு நாடக நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. உலக நாடக தினத்தின் முக்கிய நிகழ்வாக உலக மட்டத்தில் புகழ்பெற்ற நாடகக் கலைஞர் ஒருவர் இந்நாளின் முக்கியத்துவத்தைக் குறித்த தனது பிரதிபலிப்புகளையும், உலக கலாச்சார அமைதி பற்றியும் செய்தி ஒன்றை வெளியிடுவது மரபாக உள்ளது.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.06.2018 அன்று கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது, "உலக நாடக தினம் (World Theatre Day)" மார்ச் 27 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகங்களை மேடையேற்றம் செய்திட, ஆண்டுதோறும் தொடரும் செலவினமாக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒவ்வொரு வருடமும் மார்ச் 27 அன்று கொண்டாடப்படும் "உலக நாடக தினத்தினை" முன்னிட்டு தமிழகத்தில் இத்தினத்தினை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, மண்டலம் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 7 மண்டலங்களுக்கு ரூ.10.50 இலட்சமும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ரூ.4.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.15,00,000/– தொகையினை 2018–2019ஆம் நிதியாண்டில் தொடரும் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது.

4. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2018–2019ஆம் நிதியாண்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அரசாணை வெளியிடப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு இதற்கான தொகை விடுவிக்கப்படாததால், ஒவ்வொரு வருடமும் மார்ச் 27 அன்று கொண்டாடப்படும் உலக நாடக தினத்தினை முன்னிட்டு தமிழகத்தில் இத்தினத்தினை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக சிறப்பாகக் கொண்டாடும் விதமாக மண்டலம் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 7 மண்டலங்களுக்கு ரூ.10.50 இலட்சமும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ரூ.4.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.15.00 இலட்சம் தொகைக்கு ஒப்பளிப்பாணை வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஏற்று, ஒவ்வொரு வருடமும் மார்ச் 27 அன்று கொண்டாடப்படும் உலக நாடக தினத்தினை முன்னிட்டு, தமிழகத்தில் இத்தினத்தினை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக சிறப்பாகக் கொண்டாடும் விதமாக மண்டலம் ஒன்றுக்கு ரூ.1.50 இலட்சம் வீதம் 7 மண்டலங்களுக்கு ரூ.10.50 இலட்சமும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு ரூ.4.50 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) தொகையினை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு 2019–2020ஆம் நிதியாண்டில் தொடரும் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது:-

i. உலக நாடக தினத்தினை (மார்ச் 27) முன்னிட்டு தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாட ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து, நாடகக் கலைக் குழுக்களுக்கான மதிப்பூதியம், கலையரங்க வாடகை, ஒலி–ஒளி அமைப்பு, அழைப்பிதழ், விளம்பரம், புகைப்படம் மற்றும் வீடியோ ஆகிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் ;

ii. மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகங்கள் மேடையேற்றம் செய்யப்பட வேண்டும் ;

iii. தமிழ் மண்ணில் கூத்து, நாடகம், கதை சொல்லல், ஆட்டங்கள், இசைத்தொகுப்புகள் என பல்வேறு நிகழ்த்துக் கலைகள் உள்ளன. கேரளத்து கதகளி, கர்நாடகத்து யட்சகானம், ஆந்திரத்து வீதிநாடகா போன்று தமிழகத்தில் தனித்தன்மை வாய்ந்த ஒரு முழுமையான அரங்காக விளங்கும் தெருக்கூத்து நிகழ்ச்சியினை இந்நேர்வில் தொடர்ந்து நிகழ்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் ;

iv. இத்தகைய பாரம்பரிய அரங்கக்கலை மரபுகளில் ஒன்றான தெருக்கூத்துக்கலை குறித்த விழிப்புணர்வினை பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே ஏற்படுத்தும் வகையில் பள்ளி, கல்லூரிகளில் தெருக்கூத்து நிகழ்ச்சியினை நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் ;

v. கருத்துருக்கள் புதியனவையாகவும், ஆனால் அவை கண்டறியப்பட்ட மூலநூல்களிலிருந்து வேறுபடாதவாறும் அவற்றை நாடகங்களாக அமைத்திட வேண்டும் ;

vi. நமது பண்பாடு, கலாச்சாரம், மொழி, கலைகள், ஒருமைப்பாடு போன்றவற்றிற்கு மாறுபட்ட கருத்துக்கள் இடம் பெறாதவாறு நாடகங்கள் அமையப்பெற வேண்டும் ;

vii. அரசையோ அல்லது அரசின் திட்டங்களையோ விமர்சனம் செய்யாதவாறும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் இந்நாடகங்கள் அமையப்பெற வேண்டும் ;

viii. அனைத்து நாடகங்களும் மேற்காணும் ஒதுக்கீட்டுத் தொகைக்குள் ஆவணமாக்கம் செய்யப்பட வேண்டும் ;

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – AR உலக நாடக தினம் – 308 விளம்பரமும் பிரச்சாரமும் – 09 ஏனையவை (து.தொ.கு.2205 00 102 AR 30809)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினம் 2019–2020ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி (SI) இச்செலவினத்தை 2019–2020ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள கலை பண்பாட்டுத் துறை ஆணையர், சென்னை–8 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2019–2020 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2019-2020) சேர்க்கத்தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி–II / வ.செ.பொ–I) துறைக்கு அனுப்புமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர், சென்னை–8 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் இத்திட்டத்தினை நிறைவேற்றி, அதன் பின்னர், இதற்காக ஏற்பட்ட உள்ளபடியான செலவின விவரங்கள் மற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டது குறித்த அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய பயனீட்டுச் சான்றிதழ், புகைப்படங்கள், செய்தி நறுக்குகள் ஆகிய மேற்காணும் விவரங்களை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியவற்றிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 24111/கல்வி–II / 2019, நாள் 13.08.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 1136 (ஆயிரத்து நூற்று முப்பத்து ஆறு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்,
திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, சேலம், காஞ்சிபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர்
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
தலைவர் / உறுப்பினர்–செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை – 28
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.

<u>நகல்:-</u>
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
நிதி (கல்வி–II/ வ.செ.பொ.I)த் துறை, சென்னை– 9
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/08/19

**பிரிவு அலுவலர்**